யாழ். வலயக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

# Field Work Centre

FWC

## தவணைப் பரீட்சை, யூன் - 2015
## Term Examination, June - 2015

| பொருளியல் | புள்ளித்திட்டம் | தரம் :- 13 (2015) |
|---|---|---|

### பொருளியல் - I

| | | | | |
|---|---|---|---|---|
| 01) **2** | 11) **4** | 21) **3** | 31) **3** | 41) **3** |
| 02) **1** | 12) **3** | 22) **1** | 32) **2** | 42) **2** |
| 03) **5** | 13) **2** | 23) **3** | 33) **3** | 43) **4** |
| 04) **1** | 14) **1** | 24) **1** | 34) **3** | 44) **3** |
| 05) **2** | 15) **3** | 25) **1** | 35) **5** | 45) **4** |
| 06) **2** | 16) **2** | 26) **4** | 36) **1** | 46) **3** |
| 07) **3** | 17) **2** | 27) **1** | 37) **3** | 47) **2** |
| 08) **3** | 18) **5** | 28) **3** | 38) **2** | 48) **3** |
| 09) **4** | 19) 2 | 29) 1 | 39) 4 | 49) **1** |
| 10) **2** | 20) 3 | 30) 4 | 40) 4 | 50) **4** |

### பொருளியல் - II

1. 1

- குறித்த உற்பத்தியின் பொருட்டு வெளிப்படையாக ஏற்படுகின்ற பணரீதியான செலவுகள் நேரச் செலவுகள் ஆகும். (1 புள்ளி)
- உதாரணம் மின் கட்டணம், மூலப்பொருள் கொள்வனவு. (1 புள்ளி)
- மேலதிகமாக நேரில் செலவுகளாக இழந்த வருமானங்கள், பொருளாதாரத் தேய்வு, சாதாரண இலாபம். போன்றனவும் செலவுகளாகும். (2 புள்ளி)

2.


- ஓர் உற்பத்தி/ நுகர்வு தொடர்பான பல்வேறு மாற்றுத் தெரிவுகளில் ஒன்றை தெரிவு செய்யும்போது அதற்காக விட்டுக்கொடுக்க நேர்ந்த அதற்கு அடுத்த மிகச்சிறந்த மாற்றுத் தெரிவின் பெறுமதி அக் குறிப்பிட்ட தெரிவின் அமையச்செலவாகும். அமையச் செலவானது பணரீதியிலன்றி பௌதீக ரீதியிலேயே அளவிடப்படும். (2 புள்ளி)
- வளங்களுக்கு அருமை காணப்படுவதால் நாம் தெரிவுகளை மேற்கொள்ளும்போது ஒன்றிற்காக இன்னொன்றை விட்டுக் கொடுக்க வேண்டிய சந்தர்ப்பம் ஏற்படுகிறது.
- ஒரு தீர்மானத்தை மேற்கொள்ளும்போது கருத்திற்கொள்ளப்படாத அடுத்த மிகச்சிறந்த வாய்ப்பின் மீது வளங்கள் ஒதுக்கீடு செய்யப்படுவது கைவிடப்படுகிறது. (2 புள்ளி)

3.

- வளங்கள் ஒத்த தன்மையை கொண்டிராமை
- இரு பண்ட உற்பத்திகளிலும் தொழில் நுட்பம் வேறுபடுதல்.
- ஒரு உற்பத்திக்குப் பொருத்தமான வளம் மற்றைய உற்பத்திக்கு பொருத்தமற்றுக் காணப்படுதல்.


(எவையேனும் இரண்டு விடயங்களுக்கு இரண்டு புள்ளி வீதம் மொத்தம் 4 புள்ளிகள்)

4 அ.




(கிடை அச்சில் மருத்துவ உபகரணமும் நிலைக்கத்தச்சில் கல்வி உபகரணமும் குறிப்பிடப் படுதல் கட்டாயமாகும்.) (2 புள்ளிகள்)


ஆ. மருத்தவ உபகரணங்கள் நோக்கி வழங்கள் ஒதுக்கீடு செய்யப்படும். (2 புள்ளிகள்)




இ. ஊழிப்படையில் வளர்ச்சி காரணமாக வளையி வெளிப்புறம் நகருதல். (2 புள்ளிகள்)




ஈ. பொருளாதாரத்தில் இரு உற்பத்திகளும் வேறுபட்ட வளர்ச்சியைக் காட்டும். (2 புள்ளிகள்)





2. 1.

- சந்தைப் பொருளாதார முறையில் உற்பத்தி செய்யப்படாத பொதுப்பொருட்கள் நோக்கி வளங்களை ஒதுக்கீடு செய்தல்.
- வெளிவாரி விளைவுகளை கட்டுப்படுத்தல்
- போட்டித் தன்மையை ஊக்குவித்தல்.
- நியாயத்துவத்தை ஏற்படுத்தல்.
- பேரினப் பொருளாதார உறுதிப்பாட்டை பேணல்.
- நிலைத்தநிற்கும் அபிவிருத்தியை ஏற்படுத்தல். (4 x 1 = 4 புள்ளிகள்)

2.

- பிளாஸ்ரிக் பொருட்களின் நிரம்பல் அதிகரிக்கும் வேகத்தைவிட அதன்கேள்வி அதிகரிப்பு வேகம் அதிகமாகையால் பொருளின் விலைகள் அதிகரிக்கின்றன. (2 புள்ளிகள்)




(2 புள்ளிகள்)

3. 1. நுகர்வோர் மிகை ABC உற்பத்தியாளன் மிகை EFJ

2. நுகர்வோர் மிகை A உற்பத்தியாளன் மிகை BCDEFJ

3. CDFGHILM

4. CDFGHILM

5. அலகுக்கான குறை நிரப்புக் கொடுப்பனவு. P3 – P2

மொத்த குறை நிரப்புக் கொடுப்பனவு. BCDEFGHI

6. நுகர்வோன் செலுத்தும் விலை P2

சமூகநல இழப்பு I (6 x 2 = 12)

3. 1.

- குறுங்கால உற்பத்தி நடத்தையினை குறைந்து செல்லும் எல்லை விளைவு விதி விளக்குகின்றது (1 புள்ளி)
- இவ்விதி தொழிற்படும்போது ஆரம்பத்தில் சராசரி உற்பத்தி எல்லை உற்பத்தி என்பன அதிகரித்துச் செல்லும் இதன்போது சராசரிச் செலவும் எல்லைச் செலவும் குறைவடைந்து செல்லும் (2 புள்ளிகள்)

2.

- உற்பத்தி முயற்சியொன்றை தொடர்ந்து நடாத்திச் செல்வதற்கு முயற்சியாளன் ஒருவன் எதிர்பார்க்கும் ஆகக்குறைந்த வெகுமதி சாதாரண இலாபமாகும். (1 புள்ளி)
- மொத்தச் செலவு மொத்த வருமானம் என்பவை சமப்படும்போது சாதாரண இலாபம் உழைக்கப்படுகின்றது. மொத்தச் செலவினுள் வாடகை, கூலி வட்டி, இலாபம் என்பவை உள்ளடக்கப்படுவதால் சாதாரண இலாபம் மொத்தச் செலவினுள் உள்ளடக்கப்படுகிறது. (2 புள்ளிகள்)
- மொத்த வருமானமானது மொத்தச் செலவைவிட உயர்வாகவுள்ள நிலை அசாதாரண இலாபமாகும். மொத்த செலவிற்குற்கு மேலதிகமாக பெறப்படும் வருமானமே பொருளியல் இலாபமாகும் என்பதால் பொருளியல் இலாபம் மொத்தச் செலவினுள் உள்ளடக்கப்படுவதில்லை. (2 புள்ளிகள்)

3.

- மென்பான உற்பத்தி நிறுவனங்கள், தொலைத் தொடர்பு நிறுவனங்கள். (1 புள்ளி)
- இயல்புகள்.
  ஒரு சில நிறுவனங்கள் காணப்படும்.
  எதிர நடவடிக்கைகள் இடம்பெறும்
  பிரவேசத்தடை காணப்படுதல். (3 புள்ளிகள்)

4. 1. மூன்றாவது அலகு வெளியீட்டின் போது ( 2 புள்ளிகள் )

2. சராசரி மாறும் செலவு 26 ரூபா. ( 2 புள்ளிகள் )

3. TR = MC x Q ( 1 புள்ளி )

= 64 x 7

= 448 ( 1 புள்ளி )

TC = 280

மொத்த இலாபம் = TR – TC

= 448 – 280

= 168 (1 புள்ளி)

அலகு அசாதாரண இலாபம். = 168/7 = 24 ரூபா (1 புள்ளி)

4.

1. 1. வெளிநாட்டிலிருந்து கிடைத்த தேறிய காரணி வருமானம் கூட்டப்படல் ( 1 புள்ளி )

2. பெறுமானத் தேய்வினை கழித்தல் ( 1 புள்ளி )

3. பெறுமானத் தேய்வினை நீக்குதல்
தேறிய மறைமுக வரியினை நீக்குதல்.
வெளிநாட்லிருந்து கிடைத்த தேறிய காரணி வருமானத்தைக் கூட்டுதல் (3 புள்ளிகள்)

4. மொத்த நுகர்வு கழிக்கப்படல் ( C + G ) (2 புள்ளிகள்)

2.


- உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்டதும், இறக்குமதி செய்யப்பட்டதுமான முடிவுப் பொருட்கள் சேவைகளை வீட்டுத்துறையினர் கொள்வனவு செய்வதற்கு எற்பட்ட செலவுகளின் கூட்டுத்தொகை. (2 புள்ளிகள்)
- பிரிவுகள்.
  1. மோட்டார் வாகனம் போன்ற நெடு வாழ்வு நுகர்வுப் பொருள் கொள்வனவு
  2. உணவு பானம் போன்ற குறுங்கால நுகர்வுப் பொருட் கொள்வனவு.
  3. வீட்டுச் சேவை போக்குவரத்துப் போன்ற சேவைக் கொள்வனவு. (3 புள்ளிகள்)

3. 1. 4100 மில்லியன். (விடைக்கு 1 புள்ளி, செய்கை முறைக்கு 1 புள்ளி)
   2. 4500 மில்லியன். (2 புள்ளிகள்)
   3. 5000 மில்லியன். (2 புள்ளிகள்)
   4. 2900 மில்லியன் (2 புள்ளிகள்)

5. 1.

- வருமான மாற்றத்தின் விகிதமாக நுகர்ச்சி மாற்றம் கூறப்படுதல் எல்லை நுகர்வு நாட்டமாகும்.
- முதலீட்டில் ஏற்படும் மாற்றமானது வருமானத்தில் எத்தனை மடங்கு மாற்றத்தை ஏற்படுத்தும் என்பதனை காட்டுவது முதலீட்டுப் பெருக்கியாகும்.
- $1/1\text{-mpc}$ என்பதால் பெருக்கி கணிப்பிடப்படும்.
- பெருக்கிக்கும் எல்லை நுகர்வு நாட்டத்திற்குமிடையில் நேர்க்கணியத் தொடர்பு காணப்படும். (4 புள்ளிகள்)

2. எளிய பொருளாதாரத்தின் மொத்தக் கேள்வியின் கூறுகளாக நுகர்வு, முதலீடு என்பன காணப்படும். மொத்த வருமானம் மொத்தக் கேள்விக்கு சமனாக வரும் நிலை சமநிலையாகும். (Y= C + I) (2 புள்ளிகள்)




(2 புள்ளிகள்.)

3. வீட்டுத்துறை, நிறுவனத்துறை, அரசதுறை, வெளிநாட்டுத்துறை (4 புள்ளிகள்)

4. அ. சமநிலைத் தேசிய வருமானம் 625மில் (1 புள்ளி)
   பெருக்கி 2.5 (1 புள்ளி)
   வரிப்பெருக்கி 1.5 (1 புள்ளி)
   வருமான அதிகரிப்பு 250மில எனவே வரி அதிகரிக்கப்பட வேண்டியது $250/1.5 = 166.\dot{6}$ (2 புள்ளிகள்)

   ஆ. 300 ஆல் அதிகரிக்கும் (3 புள்ளிகள்)

6. 1.

- பொதுவாக எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட சட்ட அங்கீகாரம் உடைய பரிமாற்றூடகம் பணமாகும். (1 புள்ளி)
- வருமானம் உழைக்கக்கூடியதும் உயர்திரவத்தன்மை வாய்ந்ததும் பெறுமானத் திரட்டாக தொழிற்படக்கூடிய ஆனால் பரிமாற்றூடமாகத் தொழிற்படாத குறுங்காலச் சொத்துக்கள் அண்மிய பணமாகும். சேமிப்பு, காலவைப்புக்கள். (1 புள்ளி)
- தற்காலிக பரிமாற்றூடகமாகத் தொழிற்படக்கூடியதும் பெறுமானத் திரட்டாக தொழிற்படாததுமான சாதனம் பணப்பதிலீடாகும் கடனட்டை (2 புள்ளிகள்)

2. ஆம்

- பணநிரம்பலில் ஏற்படும் அதிகரிப்பு நாட்டின் வட்டி வீதத்தில் வீழ்ச்சியினை ஏற்படுத்துகின்றது.
- வட்டி வீதத்திற்கும் உத்தேச நோக்கக் கேள்விக்குமிடையில் எதிரான தொடர்பு நிலவுகின்றது.
- பணநிரம்பல் அதிகரிப்பினால் வட்டி வீதம் வீழ்ச்சியடையும்போது உத்தேச நோக்க கேள்வி அதிகரிக்கும். (4 புள்ளிகள்)

3.

- வங்கி முறைமையின் தேறிய வெளிநாட்டுச் சொத்து.
- வங்கி முறைமையினால் அரசுக்கு வழங்கிய கடன்கள்.
- வணிக வங்கிகளால் தனியார் துறைக்கு வழங்கிய கடன்கள்.
- வங்கி முறைமையின் ஏனைய தேறிய சொத்துக்கள். (4 புள்ளிகள்)

4. அ. புழக்கப்பணம் = உயர்வலுப் பணம் - (வணிக வங்கியிலுள்ள நாணயம் + மத்திய வங்கியிலுள்ள வணிக வங்கியின் வைப்புக்கள்) (1 புள்ளி)

$= 400 - (125 + 75)$

$= 200$ (1 புள்ளி)

$M1 = Cp + DDp = 200 + 400 = 600$ (1 புள்ளி)

ஆ. $M1/H = 600/400 = 1.5.$ (2 புள்ளிகள்)

இ. உயரவலுப் பணம் 50அ ஆல் அதிகரிக்கும் ஏனெனில் மத்திய வங்கி ஆவணங்களைக் கொள்வனவு செய்யும்போது வணிக வங்கிகளின் காசு ஒதுக்குகள் 50 ஆல் அதிகரிக்கும்.

பணநிரம்பல் = பணப்பெருக்கி x உயர் வலுப்பணம்.

= 1.5 x 450 = 675மில். (3 புள்ளிகள்)

7.


1. சந்தைத் தோல்விகளை சரிசெய்வதற்காக அரசு தலையிடுகின்றபோது பொருளாதாரத்தில் வெவ்வேறு விதமான செயற்திறனின்மைகளும் ஏற்றத்தாழ்வுகளும் தோன்றுதல் அரச தோல்வி எனப்படும். (2 புள்ளிகள்)

காரணங்கள்

1. அரச செயற்பாடுகளில் காணப்படும் இறுக்கத்தன்மை.
2. அரசின் சுயலாப நோக்குடைய செயல்.
3. அரசின் தூரநோக்கற்ற கொள்கை.
4. நிர்வாகச் செலவீடுகள் அதிகரித்தல்.
5. ஊழல், லஞ்சம் மற்றும் அதிகாரிகளின் செயற்திறனின்மை. (3 x 1 = 3 )

2.

- கல்விச்சேவை மேன்மைப் பண்டமாகையால் அது நேர்க்கணிய வெளிவாரியுடையது.
- சந்தை முறைமை வெளிவாரி நலனை கருத்திற் கொள்வதில்லை. தனியார் நலன் தனியார் செலவுகளை மட்டும் கருத்திற்கொண்டு வள ஒதுக்கீட்டினை மேற்கொள்கின்றன. இதனால் சமூகம் விரும்பும்அளவிற்கு குறைவான அளவினை சந்தை முறைமை உற்பத்தி செய்து வழங்குகின்றது. (2 புள்ளிகள்)




(2 புள்ளிகள்)

3.

- அரசானது வரி அரச செலவு கடன் என்பவற்றை முகாமை செய்வதன் மூலம் பேரினப் பொருளாதார இலக்குகளை அடைதல் இறைக் கொள்கை எனப்படும். (1 புள்ளி)
- அரச செலவினை அதிகரித்து மொத்தக் கேள்வியை அதிகரிப்பதன் அல்லது வரிகளைக் குறைத்து மொத்தக்கேள்வியை அதிகரிப்பதன் மூலம் பொருளாதார உறுதிப்பாட்டை ஏற்படுத்த முயற்சிக்கின்றது. (2 புள்ளிகள்)
- மாறாக அரச செலவுகளைக்குறைத்து அல்லது வரிகளை அதிகரிப்பதன் மூலம் மொத்தக் கேள்வி மட்டத்தைக் குறைப்பதன்மூலம் பொருளாதர உறுதியினை ஏற்படுத்த முயற்சிக்கின்றது. (2 புள்ளிகள்)

The National e-learning Portal for The General Education

4.


- கூட்டாக நுகரக்கூடியதும் உற்பத்திச் செலவினையுடைய ஆனால் நுகர்வில் போட்டித்தன்மை யற்றதும் நுகர்விலிருந்து விலக்க முடியாததுமான பண்டங்கள் பொதுப் பண்டங்களாகும். (2 புள்ளிகள்)
- தேசிய பாதுகாப்பு, வீதி வெளிச்சம் (1 புள்ளி)
- பொதுப்பண்டம் தொடர்பாக நுகர்வோர் கொடுப்பனவைச் செய்யாது இலவசமாக நலனை அனுபவிக்கும் நிலையினை இலவச சவாரிப் பிரச்சனை எனப்படும். (2 புள்ளிகள்)

8. 1.

| விடயம் | அமெரிக்கா | கனடா |
|---|---|---|
| மோட்டார் உற்பத்திக்கான அமையச் செலவு | 3/6= 0.5 | 2/1=2 |
| கணணி உற்பத்திக்கான அமையச் செலவு | 6/3=2 | 1/ 2=0.5 |


(4 புள்ளிகள்)

2.




(4 புள்ளிகள்)

3.




(4 புள்ளிகள்)

4.

- இருநாடுகளதும் பெயரளவு நாணமாற்று வீதத்துடன் உள்நாட்டு வெளிநாட்டு விலை மட்டங்கள் சீராக்கப்பட்டு கணிப்பிடப்படும் நாணயமாற்று வீதம் மெய்நாணய மாற்றுவீதம் ஆகும்.
- RER = NER x PD/PF (2 புள்ளிகள்)
- வர்த்தகப் பங்காளர் நாடுகளது நாணயங்களின் முக்கியத்துவத்திற்கேற்ப நிறையளிக்கப்பட்டு கணிப்பிடப்படும் சராசரி நாணய மாற்று வீதத்துடன் நாணகளது உள்நாட்டு வெளிநாட்டு விலைமட்டங்கள் சீராக்கப்பட்டு கணிப்பிடப்படும் நாணய மாற்றுவீதம் மெய்ப்பயனுறுதி வாய்ந்த நாணயமாற்று வீதமாகும்.
- REER = NEER x PD/PF (2 புள்ளிகள்)

5. ஏற்றுமதிக் கட்டமைப்பு

| வகை | 1977 | 2013 |
|---|---|---|
| விவசாயம் | 79 | 24.8 |
| கைத்தொழில் | 14 | 74.6 |
| கனிப்பொருள் | | 0.5 |
| ஏனையவை | 7 | 0.1 |

இறக்குமதிக் கட்டமைப்பு

| வகை | 1977 | 2013 |
|---|---|---|
| நுகர்வுப் பொருள் | 42 | 17.7 |
| இடைநிலைப் பொருள் | 12 | 58.6 |
| முதலீட்டுப் பொருள் | 45 | 23.6 |
| ஏனையவை | 1 | 0.1 |

(4 புள்ளிகள்)

9. 1.

- ஒரு நாட்டின் மெய் மொத்த உள்நாட்டுஉற்பத்தி/ மெய்மொத்த தேசியஉற்பத்தி தொடர்ச்சியாக நீண்டகாலத்தில் அதிகரித்துச்செல்லுதல் பொருளாதார வளர்ச்சியாகும். (2 புள்ளிகள்)
- ஒருநாட்டு மக்களின் வாழக்கைத் தரத்தில்ஏற்படும் அதிகரிப்பு பொருளாதார வளர்ச்சியாகும். அதாவது பொருளாதார வளர்ச்சியுடன் ஏனைய சமூகப் பொருளாதார பண்பாட்டு அம்சங்களில் ஏற்படும் விருத்தி பொருளாதார அபிவிருத்தியாகும். (2 புள்ளிகள்)
- பொருளாதார அபிவிருத்திக்கு பொருளாதார வளர்ச்சி ஒரு கட்டாய நிபந்தனையாகும். (1 புள்ளி)

2.

- சேமிப்புக்களையும் முதலீடுகளையும் ஊக்குவித்தல்.
- மனித மூலதன விருத்திக்கு முதலீகளை மேற்கொள்ளல்.
- பேரினப் பொருளாதார உறுதிப்பாட்டை ஏற்படுத்தல்.
- உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தல்
- ஆராச்சி அபிவிருத்திக்காக முதலீடுகளைச் செய்தல்.
- நல்லாட்சி. (5 x 1 = 5 புள்ளிகள்)

3.

- பங்குபற்றும் தன்மை.
- பொறுப்புக்கூறும் தன்மை
- வெளிப்படைத் தன்மை
- சட்டதிட்டங்களை பின்பற்றும் தன்மை
- சிறுபான்மையினரின் கருத்துக்களை உள்வாங்கல். (5 x 1 = 5 புள்ளிகள்)

4.

- உலகப்பொருளாதாரங்களின் பூரணமான அனுகூலங்களைப் பெற்றுக்கொள்ளல்.
- பேரினப்பொருளாதார உறுதிநிலை பேணுதல்.
- உயர்வான சேமிப்பு முதலீட்டு மட்டங்களை பேணல்.
- சந்தை சக்திகளினுடாக வளப்பகிர்வுக்க இடமளித்தல்.
- அர்ப்பணிப்புடன் கூடிய நல்லாட்சி (5 x 1 = 5 புள்ளிகள்)

10. 1.

பொருளாதார விளைவுகள்.

- உற்பத்தி செயற்திறன் குறைதல்.
- வளப்பயன்பாடு குறைதல்.
- போசாக்கின்மையால் மனிதவளம் அழிதல்
- சேமிப்பு முதலீடு குறைதல் (3 புள்ளிகள்)

சமூக விளைவுகள்.

- சமூக ஏற்றத்தாழ்வு மற்றும் இயலாமை.
- புறக்கணிக்கப்படல்.
- குற்றச் செயல்கள் (கொலை, களவு, கொள்ளை) (2 புள்ளிகள்)

The National e-learning Portal for The General Education

2.

வறுமைக்கான காரணங்கள்.

- கீழ்க்கட்டம்ைப்பு வசதிகள் போதாமை.
- விவசாயத்துறையின் மந்தமான வளர்ச்சி.
- சமூகநல வேலைத்திட்டங்களின் செயற்திறனின்மை. (2 புள்ளிகள்)

பிராந்த சமமின்மையை குறைப்பதற்கான நடவடிக்கைகள்.

- கிராம அபிவிருத்தி செயற்திட்டங்களை மெற்கொள்ளல். (கமநகும)
- வீதி அபிவிருத்திச் செயற்திட்டங்களை மேற்கொள்ளல். (மகநகும)
- குடிநீர் மற்றும் வடிகால் அமைப்புச் செயற்திட்டங்களை செயற்படுத்தல்.
- பிராந்திய அபிவிருத்தித் திட்டங்கள். (வடக்கின் வசந்தம், கிழக்கின் உதயம்) (3 புள்ளிகள்)

3.

- உயர்ந்த பிறப்பு மற்றும் உயர்ந்த இறப்பு வீதங்களிலிருந்து குறைந்த பிறப்பு வீதங்களுக்கு மாற்றமடைதல்.
- சனத்தொகை வயதுக்கட்டமைப்பு பிரமிட் வடிவத்திலிருந்து உருளை வடிவிற்கு மாற்றமடைந்தது.
- முதியோர் சதவீதம் அதிகரித்துச் செல்லுதல்.
- 25 - 54 வயதுப் பிரிவு சனத்தொகையில் வீழ்சிப்போக்கு காணப்படுகிறது.
- உயர்ந்த ஆயுள்எதிர்பார்க்கை காரணமாக ஆண்களைவிட பெண்களின் ஆயுள் அதிகரித்துள்ளது.

(5 புள்ளிகள்)

4. அரசாங்கத்தின் மீண்டெழும் செலவினத்தில் ஏற்படும் அதிகரிப்பு பொது முதலீட்டுக்குத் தடையாகும்.

- அரசாங்கம் முதியவயதுச் சனத்தைொகையை பராமரிக்க அதிக செலவைத் தாங்கவேண்டியிருத்தல்.
- கருவளவீதத்தில் ஏற்படும் வீழ்ச்சி தொழிற்படையில் வீழ்ச்சியை ஏற்படுத்தும்.
- 15 வயதிற்கு குறைந்த சனத்தொகையின் அளவு வீழ்ச்சியடைவதால் கல்வி மீதான பௌதீக உட்கட்டமைப்பு தேவைப்படமாட்டாது.
- முதிய சனத்தொகை தமது நுகர்விற்காக கடந்தகால சேமிப்புக்களைப் பயன்படுத்துவதால் உள்நாட்டு சேமிப்பு பாதிக்கப்படும். (5 புள்ளிகள்)